# பூமி வெடித்து எரியும் போது, மணவாட்டி எங்கிருப்பாள்?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #21

**284. கேள்வி:** சகோ. பிரான்ஹாமே, பூமி வெடித்து எரியும் போது, மணவாட்டி எங்கிருப்பாள்? வாதைகள் விழுந்த போது, இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டைப் போல் அது ஒரு இடமாக இருக்குமா? அது நடக்கும் போது மணவாட்டி பூமியில் இருப்பாளா? அப்படியானால், அவள் எங்கிருப்பாள்?. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும்

நேரத்தில் மணவாட்டி அனைவரும் ஒரே இடத்தில் இருப்பார்களா?

77. மணவாட்டி, பூமி வெடிக்கும் போது... எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் நேரம், மரித்தோர் நித்திரையினின்று எழும்பி, உயிரோடிருப்பவர்களுடன் ஒன்று சேர்ந்து, எடுத்துக் கொள்ளப்படுதலில் அவர்களைக் கொண்டு செல்லும்.

இப்பொழுது, மணவாட்டி... இப்பொழுது, பாருங்கள், எடுத்துக் கொள்ளப்படுதல் என்பது ஆயிரம் வருட

அரசாட்சிக்கு முன்பு நடைபெற வேண்டிய சம்பவங்களில் ஒன்றாகும்.

பூமி எரியும் சம்பவம், ஆயிரம் வருட அரசாட்சிக்கும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கும் இடையே நடக்கும் ஒன்று.

பாருங்கள்? பரிசுத்தவான்கள் பூமியின் பரப்பில் பாளயமிறங்கியிருக்கும் போது, சாத்தான் அந்த அன்பார்ந்த நகரத்தை சுற்றி வளைவான்.

தேவன் அப்பொழுது வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் பொழிந்து

அவர்களை அழித்துப் போடுவார். சரி, வேதம் அவ்வாறு உரைக்கிறது.

★★★★★

